செ.வெ.எண் 956 நாள் 10.12.09

## செய்தி வெளியீடு – 10.12.2009

# நெடுஞ்சாலைத் துறையில் 140 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 362 சாலை ஆய்வாளர்கள் என 502 பணியாளர்கள் புதிதாக நியமனம்!

## நியமன ஆணைகள் வழங்கும் பணிகளை முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்!

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின், முந்தைய அ.தி.மு.க. அரசு பிறப்பித்த வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்து, அரசுத் துறைகளிலும், அரசு சார் நிறுவனங்களிலும் காலியாக இருந்த பணியிடங்களில் பணியாளர்களை நியமனம் செய்வதற்கு ஆணையிடப்பட்டது. அத்துடன், வேலைவாய்ப்புக்கான வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்வு செய்தும் ஆணையிடப்பட்டது. அதன் காரணமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற பல்வேறு அமைப்புகள் மூலமாகக் காலிப் பணியிடங்களை நிரப்பும் பணி முடுக்கிவிடப்பட்டது.

இவற்றின் பயனாக, இதுவரை ஏறத்தாழ 3 லட்சத்து 50 ஆயிரம் பேருக்குமேல் நிரந்தரப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில், தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையில் 295 உதவிப் பொறியாளர்கள் உட்பட 392 பணியாளர்களும், 299 சாலைப்பணியாளர்கள், 45 இளநிலை உதவியாளர்கள் உட்பட 469 பணியாளர்களும், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 33 தட்டச்சர்கள் உட்பட 35 பணியாளர்களுமாக இதுவரை 896 பணியாளர்கள் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிகிறார்கள்.

அவர்களைத் தொடர்ந்து, மேலும் 140 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 362 சாலை ஆய்வாளர்கள் என மொத்தம் 502 பேர் வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையில், நேர்காணல் மூலம், நியமனம் செய்வதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 இளநிலை வரைதொழில் அலுவலர்களுக்கும், 5 சாலை ஆய்வாளர்களும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (10.12.2009) பணிநியமன ஆணைகளை வழங்கி, நியமனப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் வெள்ளக்கோவில் திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் திரு. ஜி. சந்தானம், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9